www.tamilarangam.net

# பிரித்தானியாவில் வாழும் தமிழீழ மக்களே பசுமைப்புரட்சியை நோக்கி எமது தாயகம் செல்லும் இவ்வேளையில் உங்களிடம் ஒரு தயவான வேண்டுகோள்

உங்களுக்கு TEEDOR என அழைக்கப்படும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைப்பற்றித் தெரிந்திருக்கும். அதுமட்டுமல்ல, எமது தாயகத்தில் அது செய்துவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றியும் உங்களுக்குப் புரியும். எமது தாயகத்தில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் செயற்படுத்தும் செயற்த்திட்டங்கள், ஆழமான ஆய்வுகளுக்குப் பின்னரே நடை முறைப்படுத்தப்படுகின்றன. இந்தச்செயற்திட்டங்களிற்குத் தேவையானநிதியுதவியும் தமிழீழத்தின் குடிமக்களின் பங்களிப்பினால் வருவதே. தற்போது எமது தாயகத்தில் எம் சகோதர சகோதரிகளின் வாழ்வினை மேம்படுத்துவதற்க்காக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற்திட்டங்களுக்கு உதவி செய்வது தமிழிழக் குடிமக்களின் தார்மீகக் கடமையாகும்.

தற்போது இலங்கை அரசினால் எமது தாயகத்திற்க்கு விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் பலத்த இன்னல்களை எம் மக்களுக்குத் தோற்றுவிப்பது நீங்கள் அறிந்திருக்கக்கூடும் இந்தத்தடையால் எமது செயற்திட்டங்களும் சிலசிக்கல்களை எதிர் நோக்கியதால் நாம் அவற்றை வெற்றிகொள்வதற்க்கு உள்ளூர்மூல வளங்களையே மாற்றீடாகக் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டது. எமது தொழில் நுட்பத்தை நாம் சுயமாகவே மேம்படுத்துவதற்கு விரிவான உதவிகள் தற்போழுது தேவைப்படுகின்றன. குறிப்பாக எமது நிறுவனத்தினால் செய்யப்பட்ட ஆய்வின் பின்னர் எமது தாயகத்தின் விளைநிலத்தில் பயன்பாடு செய்யக்கூடியதாக மிகப்பொருத்தமான உரவகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த அற்புதமான உரமே பயிர்அமுது என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பயிர்அமுது எமது விளைநிலத்தில் பயிரிடக்கூடிய பலதரப்பட்ட பயிரினங்களுக்கு அற்புதமாக பயன் அளிக்கிறது. பயிர்அமுதானது இலங்கை அரசின் உணவுத்தடையாலும், உணவுப்பற்றாக்குறையாலும் வாடும் எம் தேசத்திற்க்கும் இது ஒரு வரப்பிரசாதமாகும். ஆனால் பயிர்அமுதை நாம் போதியளவில் தயாரிப்பதற்க்கு நிதி உதவி தேவைப்படுகிறது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கணிப்பீட்டின்படி இதற்க்காக ஐந்து மில்லியன் ரூபா பணம் தேவைப்படுகின்றது.

இந்த நிதியைத் திரட்டிக்கொள்வதற்க்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உங்கள் ஆதரவோடு நல்வாய்ப்பு சீட்டிழுப்பினைச் செய்யமுடிவுசெய்துள்ளது. எமது தேசத்தில் பசுமைப் புரட்சி ஒன்று தோன்றிட உங்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. நீங்கள் வழங்கும் பங்களிப்பு எமது தாய்நிலத்தில் தலைவிரித்தாடும் உணவுப்பற்றாக்குறையை நீக்கிவிடும் என்பதும் எமது எதிர்பார்ப்பு. நல்வாய்ப்பு சீட்டு வேண்டுவதுடன். மேலும் நீங்கள் அன்பளிப்பாகவும் பங்களிக்கலாம்,

**நீங்கள் உடனடியாகச் செய்யவேண்டியது இதோ!!!**

தயவுடன் நீங்கள் வாங்கக்கூடிய அல்லது விற்க்கக்கூடிய சீட்டுக்களின் தொகையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திடம் பெற்றுக்கொள்ளுங்கள். லண்டனிலுள்ள தமிழ்க்கடைகளிலும் இவ்அதிஸ்டலாபச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம், விற்க்கப்படமுடியாத சீட்டுக்கள் எம்மால் திருப்பி எடுக்கப்படமாட்டாது. விற்க்கப்பட்ட சீட்டுக்களின் அடிக்குறிப்புக்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பின்வரும் முகவரிக்கு 27.08.2000 இற்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

**TEEDOR (UK), 202, Long Lane, London SE1 4QB. TEL: 020 7403 4554 or 07946 312861 or 07712 259629**

உங்கள் காசோலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் TEEDOR என்ற பெயரில் வரையுங்கள். வெற்றி பெற்றவர்கள் பற்றிய விபரம் நிறுவனத்தால் அறிவிக்கப்படும். இதற்க்காக நிறுவனத்தின் தகவல் இணையப் பக்கத்தையும் நீங்கள் பார்வையிடலாம் http//www.teedor.org.

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள எல்லா வயல்களிலும் இவ்வருட காலபோகத்துக்கான நெல்லை விதைப்பதற்கும் பசளை போடுவதற்கும் நாம் உதவ முன்வந்தால் தமிழீழத்தில் நிலவும் உணவுபற்றாக்குறை, உணவுத்தடை, பசி, பட்டினி அனைத்தையும் தகர்த்தெறிந்து எம்மக்களை காப்பாற்ற முடியும்.

எதியோப்பியா, சோமாலியா மக்களின் நிலை எம்மக்களுக்கு வருவதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. உணவு உற்பத்தியில் எமது தாயகம் தன்னிறைவு அடைய இன்றே உங்கள் அன்புக் கரங்களை நீட்டி எம் தொப்புள்கொடி உறவை நிலைநாட்டுவோம் வாருங்கள்.

**எமது தாயகத்தைக்கட்டி எழுப்பும் முயற்சியில் இன்றே எம்முடன் இணையுங்கள்**

**நன்றி**

அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 020 8646 2885

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# MORE FOOD PRODUCTION FROM OUR HOME LANDS

**'Payir Amuthu' is a TEEDOR PROJECT**

You are aware that Tamil Eelam Economic Development Organisation, known popularly as TEEDOR, has been working on the ground in our homeland, identifying valuable developmental projects. These developmental projects are then carefully studied with a view of preparing a master plan for implementation. The funding for these projects come largely from Eelam Tamil expatriates. They are convinced of the need to support these projects for sustaining the lives of our brothers and sisters who have to endure the terrible hardships in our homeland.

The economic embargo currently imposed in our homeland by the Sri Lankan government coupled with the difficulties of importing raw materials and new equipment into our territory forces us to look for locally available materials. There is therefore a great need to identify projects that are based on an 'appropriate technology' which can provide self sufficiency.

As a result of considerable research in developing a suitable fertiliser to improve the yield of the crops grown in our soil we have developed this wonder product called 'Payir Amuthu'. This fertiliser will improve the yield of the various crops in our soil and thereby help overcome the food shortage faced under the food embargo. Manufacturing this product in sufficient quantities require funds. TEEDOR require a capital of Rs. 5 m.

TEEDOR is raising this fund through a lottery scheme and seek your support to lend a helping hand towards feeding our people back home and to prevent impending food shortage and starvation in Tamil Home land. This lottery is for Tamil friends only and tickets now available in most of the Tamil shops in London. Now the tickets are available in Tamil Shops in London.

- ***Please request no. of tickets you can either buy or sell from TEEDOR office***
- ***Return of unsold books not acceptable***
- ***Send counterfoil to TEEDOR (UK), 202 Long Lane, London SE1 4QB on or before 27/08/2000 and***
  ***for urgent contact phone: 020 7403 4554 or 07946312861or 07712 259629***
- ***Write your cheque to 'TEEDOR'***
- ***Winners will be published in TEEDOR Website: http//www.teedor.org***

Please think about all the money you are spending on luxury items! Can you give up some of those luxury items like smoking, drinking alcohol, partying and etc... and give few pounds for this project? Just imagine yourselves in the shoes of people in Vanni and other parts of Tamil Eelam who have been denied food that is their basic human right! Let us all join together and contribute generously to grow more food to alleviate hunger and poverty in our motherland.

**Please do not ignore this SOS appeal.**

**Thank you.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்